Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உச்சிஷ்ட கணபதி

அருளியது

உபாஸனாகுலபதி ஸ்ரீ துர்க்கைச் சித்தர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உச்சிஷ்ட கணபதி

அருளியது

உபாசனா குலபதி

ஸ்ரீ துர்க்கை சித்தர்

ஜெய துர்கா பீடம்

ஆஸ்ரமம் சாலை

(தாம்பரம் காஞ்சீபுரம் நெடுஞ்சாலை)

படப்பை 601 301

தொலைபேசி : 954111-274150

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முதற் பதிப்பு
2004

(C) ஜெய துர்கா பீடம்
ஆஸ்ரமம் சாலை
(தாம்பரம் காஞ்சீபுரம் நெடுஞ்சாலை)
படப்பை 601 301
தொலைபேசி : 954111-274150

விலை ரூபாய் 15/-

பதிப்பாசிரியர்:
உபாசனாஸ்ரீ அஸ்வமித்ரா

அச்சிட்டோர் :
ஸ்ரீ கணேசா கிராஃபிக்ஸ்
103, முதல் பிரதான சாலை
செந்தில் நகர் இணைப்பு
சின்ன போரூர், சென்னை - 600 116
தொலைபேசி எண் : 2476 7531

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அருளுரை

எல்லா வழிபாடுகளிலும் பிள்ளையார் வழிபாடு தலைச்சிறந்த முதலாம் வழிபாடு. விவாஹம் தொடங்கி விவாதம் வரை பிள்ளையாரின் துணை வேண்டும். பிள்ளையார் சிவபெருமானின் மூத்த முழு முதல் தெய்வம். பிரணவம் என்ற ஓங்காரம் எப்படி முழு முதல் ஆனது என்று சொல்கிறோமோ, பிள்ளையாரும் அப்படியே. எந்த காரியத்தை செய்யத்துவங்கினாலும், எந்த காரியத்திற்கு வெளியே சென்றாலும், பிள்ளையார் என்ற விக்கின விநாயகரின் துணை இருந்தால் அன்றி அந்தக் காரியத்தில் வெற்றி கிடைக்காது. பிள்ளையாரை சரியாக புரிந்து கொள்ளாத தினால்தான் பிரமன் சிறைப்பட நேர்ந்தது. பிள்ளையாரைப் பற்றி நன்கு உணர்ந்திருந்ததால்தான், தந்தைக்கு நிகராக குருவாக, முருகன் உயர நேர்ந்தது. சிவனின் மகன் இவன் என்பதினால் இவரை பிள்ளையார் என்று சொல்வார்கள். இவர் சிவபெருமானின் பிரணவாகாரத்தில் இருந்து பிறந்தவர். பிள்ளையாரை தொழாதவர்கள் பிள்ளைகளே இல்லையென்று சொல்வார்கள்.

அரச மரத்தின் மூலத்தில் பிரம்ம ரூபமும், மத்தியில் விஷ்ணு ரூபமும், காம்புகள், சமித்துக்களில் சிவபெருமானும் விளங்குவதாக சொல்லுவார்கள். மூலபிரம்மமாக எல்லா அரச மரத்தடியிலும் பிள்ளையாரே விளங்குகின்றார். பிள்ளையாரை யஜுர் வேதமும், மற்ற எல்லா வேதங்களும் போற்றிப் புகழ்கின்றன.

பிள்ளையாரின் பிரியமான உபாஸகர் அவ்வைப் பிராட்டிதான். பிள்ளையாரை பாடிப் புகழ்ந்து அவ்வை பாடிய பாடல்கள் ஏராளம். மூத்த பிள்ளையார், பொல்லாப் பிள்ளையார் (செதுக்காத), உச்சிஷ்ட பிள்ளையார், வாஞ்சா கல்ப பிள்ளையார் என்று பிள்ளையாரை "கணபதி அதர்வசீரிஷம்" என்ற மஹா மந்த்ர நூல் மஹா கணபதியின் பெருமையை முற்றமுழுதுமாக பேசுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கணபதி உபாஸகர்கள் வாழ்க்கையில் வெற்றி கண்டவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் வழிகாட்டும் தெய்வம் பிள்ளையார்தான். பிள்ளையார்பட்டி என்ற கணபதி க்ஷேத்ரம் இவர்களின் வழிபாட்டிற்கு உரியது. பிள்ளையாருக்கு விருப்பமான நிவேதனம் என்று கருதப்படுவது புண்ட்ரம், மோதகம். எல்லா தடைகளையும் நீக்குகின்ற முக்கண்ணன் இவர் என்பதால், இவர் முன்பு உடைக்கப்படும் தேங்காய்கள் சிதறல்களாக உடைக்கப்படுகின்றன. எல்லா விஷங்களையும் தீர்த்து வைக்கும் வல்லமை இவருக்கு உண்டு என்பதால், இவருக்கு அருகம்பில் சிறப்பானது.

முருகன் சக்திவேல் சரவணன்; விநாயகரோ பஞ்சாட்ர ஸ்வரூபமாக விளங்குகின்றவர். இவருடைய கரங்கள் ஐந்து. இதனால் இவருடைய ஒவ்வொரு கரமும் பஞ்சாட்சரத்தின் ஒவ்வொரு எழுத்தின் ஆதியாக விளங்குகின்றது.

ஐந்து கரத்து விநாயகனைத் தொழ அடியோடு ஓடும் எல்லா வினைகளும். இவர் சக்தியோடு கூடி விளங்குகின்ற பொழுது, வல்லபகணபதியாக விளங்குகின்றார். நீல சரஸ்வதியோடு விளங்குகின்றபொழுது, இவர் உச்சிஷ்ட கணபதியாக விளங்குகின்றார். அறிவு, ஆற்றல், தெளிவு, எடுத்த காரியத்தில் வெற்றி, மனோபீதி நீங்குதல்-இந்த ஐந்து செயல்களும் பிள்ளையாரை வணங்குவதால் கிடைக்கின்ற லாபமாகும். நீங்கள் பிள்ளையாரை போற்றுங்கள், நல்ல பிள்ளைகளாக வாழுங்கள், உங்களுக்கு வாழ்வில் வெற்றி கிடைக்கும், துணிவு உங்களுக்கு துணைவரும், பணிவு உங்கள் மனப்பயிரில் விளையும். நீங்கள் எதைத் துவங்கினாலும் பிள்ளையார் சுழியிட்டு எல்லா காரியங்களையும் துவக்குங்கள். இந்தப் பிள்ளையார் சுழி உங்கள் தலைச்சுழியை மாற்றும். நீங்கள் வளமும் நலமும் பெற்று வாழ நல்லாசிகள்.

ஆசியுடன் ஸ்ரீ துர்க்கை சித்தர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உச்சிஷ்ட கணபதி

உபாஸனாமார்க்கம் என்பது பெரிய கடல். கடலுக்குள் திரவியங்கள் நிறைந்திருப்பதைப்போல உபாஸனையில் மந்த்ரங்களும், மூர்த்தங்களும் நிறைந்திருக்கின்றன. கடலுக்குள் உள்ள திமிங்கிலங்கள், சுறாமீன்கள், தேளீக்கள், கடல் ஆமைகள் இவைகள் கடலின் சொத்துக்கள். மந்திரமாக் கடலிலும் இதைப் போன்ற வலிமை, வல்லமை மிக்க மந்திரங்களும் அதிகம்.

கடலுக்குள் முத்து எடுக்கப்போகிறவன், முத்திலேயே கருத்தாக இருக்கவேண்டும். இல்லையென்றால் அழகு நண்டுகளும் அலங்கார ஆமைகளும் இவனை மயக்கும். வந்ததை மறந்து கண்டதைக் கொண்டு கடல் வெளிக்கு வந்து சேருவான். செழுமையான எல்லா இடங்களிலும் பழமை யானவைகளும், புதுமைபொலிபவைகளும், தேளும், நட்டுவாக்காளியும் இருப்பதை உணரலாம். எதையும் சிந்திக்கத் தெரிந்தவன், எதையும் இரண்டு கண்களைத் திறந்து பார்க்கத் தெரிந்தவன், எந்தப் பொருளையும் உற்று உணர்ந்து ஆயத்தெரிந்தவன் புண்ணியத்தின் பொற்காலக் குழந்தை.

நல்லவைகளும் தீயவைகளும் நான்கு புறங்களிலும் நிறைந்து இருப்பது உண்மை, மந்திர சாஸ்திரங்களும் இதற்கு விலக்கல்ல. மந்திர சாஸ்திரங்கள் நல்லவர் கண்களுக்கு விருந்தாகவும், அல்லவர் கண்களுக்கு கொத்தும் பருந்தாகவும் காட்சி தரும் - பருந்து கூட பயன் தரும் அது யாருக்கு என்பது தான் கேள்வி? மருந்து கூட பயன்தரும் - அது நோயாளிக்கு மட்டும்தானே! விருந்து படைப்பது விருந்தாளிக்குமட்டும் தான். வீட்டில் வாழ்பவர்கள் விருந்து சாப்பிடக்கூடாது.

மனிதனுக்கு மனக் கட்டுப்பாடு, உடல் கட்டுப்பாடு, எண்ணக் கட்டுப்பாடு, பார்வைக் கட்டுப்பாடு பேச்சுக் கட்டுப்பாடு, மூச்சுக் கட்டுப்பாடு, நடைக் கட்டுப்பாடு என்று எவ்வளவோ கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கட்டுப்பாடு இல்லாதவன் கடவுளை விட்டு விலகிப்போனவன். அவன் பேய்களுக்கும், ஆவிகளுக்கும் சொந்தக்காரன். நீங்கள் உங்கள் கண்களை நன்றாக திறந்து கொண்டு, கால்களிலே நடையங்களை மாட்டிக்கொண்டு மந்திர, சாஸ்திர பெரும் வழியிலே நடவுங்கள்.

மந்திர சாஸ்திரம் பயமுறுத்துகிற இடமும் அல்ல, பயப்படவேண்டிய இடமும் அல்ல. ஒரு சிலர் முள்ளை காலிலே குத்திக்கொண்டு, முள்குத்திவிட்டது என்று முள்ளின் மீது பழி சுமத்துவார்கள்.

முள் இவர்களைத் தேடிவந்து குத்தவில்லை. இவர்கள் காலிலே குத்த வேண்டும் என்று அதற்கு ஆசையுமில்லை, பாசமும் இல்லை. இவர்களின் அறியாமை, சரியான பார்வை இன்மை இவைகளே இவர்களின் துக்கத்துக்கு காரணம்.

அஞ்ஞானிகளாக இருந்தால் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். கொஞ்சம் நிதானமாக அவர்களை திருத்திக் கொள்ளலாம். அறிவாளிகள் என்பவர்கள் தாம் வலையிலே முழுக்க, முழுக்க மாட்டிக் கொண்டு, தான் மாட்டிக் கொண்டதோடு இல்லாமல் மற்றவர்களையும் மாட்டிக் கொள்ளச் செய்து விடுவார்கள். குள்ள நரி தான் வலையிலே மாட்டிக் கொண்டபோது குரல் கொடுத்து மற்றவைகளையும் கூப்பிட்டு மாட்டிக் கொள்ளச் செய்தது. விளைவாக மற்ற நரிகளும் மாட்டிக்கொண்டன.

நீங்கள் நரிகளின் குரலைக் கேட்டு ஓடாதீர்கள், ஆந்தைகளின் அலறல்களுக்கும் பயப்படாதீர்கள், சந்தைக் கடையில் இருக்கும் எல்லாச் சாமான்களும் நமக்கு தேவையானவை அல்ல, நமக்கு சொந்தமானவையும் அல்ல. இதைப் புரிந்து கொண்டவன், நன்கு தெரிந்து கொண்டவன் மந்திர சாஸ்திர பெருங்கடலிலிருந்து நல்முத்துக்களைக் கொண்டு வந்து குபேரனைப்போல் குதூகலமாக வாழுகின்றான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்தப் பீடிகை எதற்கு?

மந்திர சாஸ்திரம் மனித நேய சாஸ்திரம்; மனிதனை போஷிக்கின்ற சாஸ்திரம்; மனிதனுடைய புண்ணிய பலனை கூட்டி வைக்கின்ற சாஸ்திரம். இதில் உள்ள எல்லா தேவதைகளையுமே பூஜிப்பது, ஜெபிப்பது என்று முடிவு எடுக்கக் கூடாது. ஏன் என்றால், சில சமயங்களில் தண்ணீரைக் குடிக்கிறோம் என்று விஷத்தைக் குடிக்கும் என்ற நிலை ஏற்பட்டுவிடும்.

மந்திர சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட தெய்வங்களில் சிறப்பான தெய்வங்கள், மிக மிகச் சிறப்பான தெய்வங்கள், பலனுக்கு மட்டும் போற்ற வேண்டிய தெய்வங்கள், புண்ணியங்களை லாபமாக்கிக் கொள்வதற்காக ஜெபிக்க வேண்டிய மந்திரங்கள் இவைகளும், இவைகளைப் போன்ற சீரும், சிறப்பும் பெற்ற மந்திரங்கள் எவை, எவை என்பதைப் புரிந்து கொண்டு ஜெபம் செய்ய வேண்டும்.

அது எப்படி முடியும்?

ஒரு பெண்ணுக்கு நல்ல கணவன் வேண்டும், ஒரு தந்தைக்கு நல்ல மகன் வேண்டும், ஊருக்கு அழகான கோவில் வேண்டும், நல்ல கொட்டிலுக்கு ஒரு பசு வேண்டும், உபாஸகனுக்கு நல்ல குரு வேண்டும்.

நன்றாக குரு வாழ்க குருவே துணை?

இதனால்தான் நமக்கு குரு ஒருவர்தான் துணை என்று பழைய காலத்தில் நம் பட்டிக்காட்டில் நமக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். குருதான் பிரம்மா, குருவே திருமால், குருவே சிவம், குருதான் எல்லாவற்றிற்கும் மேம்பட்ட பரப் பிரம்மம். அப்படிப்பட்ட குருவை கண்டு கொள்ளாதவன், இரண்டு கண்ணும் இருந்தும் பார்க்கத் தெரியாதவன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நல்ல குரு தேவை. குருவும் குருடனாக இருந்து சீடனும் குருடனாக இருந்தால் "குருடும் குருடும் குருட்டாட்டமாடி குருடும் குருடும் குழி விழுந்தவாறே" என்றபடி ஆகும்.

நல்ல ஞானம் தரும் குருமார்கள் இகத்திலே அகத்தையும், பரத்திலே வீட்டையும் நம் வீட்டுக்குள்ளே கொண்டு வந்து சேர்ப்பார்கள். இத்தகைய அருமையும், பெருமையும் உடைய குருமார்களால் சீடன் சிறப்புற்ற நிலைக்குப் பிறகு கொண்டுவரும் பெரிய பொக்கிஷம், தங்கச் சுரங்கம், உச்சிஷ்ட கணபதி உபாஸனை.

கணபதி மந்திரங்கள் ஏராளம்; தெரிந்த மந்திரங்களை விட மற்றவர்களுக்குத் தெரியாமல் மடக்கிவைத்துக்கொண்ட மந்திரங்கள் ஏராளம். உச்சிஷ்ட கணபதி மந்திரம் நிறைந்த பலனைத் தருவது, நிறைந்த வாழ்வைத் தருவது.

உச்சிஷ்ட கணபதி உபாஸனை மிக, மிக ரகஸ்யமானது. ஆழ்ந்து அனுபவித்துப் பார்க்கப், பார்க்க, ஜெபிக்க, ஜெபிக்க அவன் உச்சிஷ்ட கணபதியிடம் இருந்து நிறைய கொடைகளைப் பெற்று மற்றவர்களுக்கும் அள்ளி வழங்கும் கொடையாளி ஆகிறான்.

இந்த மந்திரத்தை ஒன்பது லட்சம் முறை ஜெபம் செய்தவரிடம் இருந்துதான் இதை உபதேசம் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏதோ மோட்ச மந்திரங்களைப் போல் அவனும் கேட்டான் நானும் சொன்னேன் என்று, கர்ண மந்திரங்களைப் போல காதுக்குள் ஓதக்கூடாது. இப்படி ஓதுகிறவன் மந்திர பலத்தை இழப்பான். கேட்கிறவன் மந்திரம் சித்தியாகாமல் தவிப்பான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நல்ல நிலையில் மந்திரத்தைப் பெறுவது எப்படி?

நல்ல நிலையில் மந்திரங்களைப் பெறுவது என்பது தற்காலத்தில் மிக மிகக் கடினமாக இருக்கிறது. ஒரு சிலர் தாங்களே அச்சடித்த காகிதங்களில் இருந்து, அச்சகப்பிழைப் பேய்களுடன் கூடிய அக்ஷரங்களை ஜெபித்து வருகிறார்கள். இந்த மந்திரங்கள் சரியா, பிழையா என்பதைக் கூட இவர்களால் கண்டுபிடிக்க இயல்வதில்லை. ஏனென்றால், பிழைபட்ட கழைக் கூத்தாடி மந்திரங்களை இவர்கள் ஜெபித்து, அந்த மந்திரங்களின் பூரண புருஷர்கள் என்று தங்களை வெளிப்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். இந்த வெளிப்பாட்டின் விளைவு, மற்றவர்கள் முன்னால் யாரும் தங்களை எதையும் கேட்டுக் கொள்ள அனுமதிப்பதில்லை. இதைவிடச் சிறந்த வேடிக்கை என்ன வேண்டும்? இந்த மந்திரங்களின் உரிமையாளர்கள் அந்த மந்திர பூமியின் சொந்தக்காரர்கள் என்றும், மாமேதைகள் என்றும் தீர்மானித்துக் கொண்டு விடுகிறார்கள். கால் ஒடிந்த மந்திரங்களை இவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு துணையாக ஒரு சிலர் கூட்டிச் செல்கிறார்கள்.

இந்தச் சப்பாணி மந்திரங்கள் தாமும் நடக்க முடியாமல், தன்னைத் துணைக்குக் கூட்டிக் கொண்டு போனவர்களையும் வேகமாக நடக்க விடாமல் வழித் தடங்கல்களாக விளங்குகின்றன.

அறிவாற்றல் உடையவர்கள் நல்ல நூல்களை மேலும் மேலும் படித்து, இது வழியில் சரியான வழிகாட்டிகளைத் தேடி அலைந்து, தன்னுடைய குருவை மாற்றிக் கொள்ளாமல், வழிகாட்டிகள் மூலம் சரியான வழிகளைத் தேடிக் கொள்கிறார்கள். இதனால் இந்த முயற்சியாளர்களுக்கு மிக மிகச் சிறந்ததான துல்லியமான மந்திரங்கள் கிடைத்து விடுகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குரு என்பவர் தாயைப் போல. தாயையும் மாற்ற முடியாது; குருவையும் மாற்ற முடியாது. உடலுக்கு உயிர் தருபவள் தாய்; அறிவுக்குக் கண்ணைத் திறந்து வைப்பவர் குரு. தாயும், குருவும் இணையான இரண்டு நேர்க்கோடுகள். இதிலே ஒரு கோடு பின்னப்பட்டாலும், வாழ்வு சற்று சலனப்பட்டுவிடும். எனவேதான், நல்ல குருவைத் தேடுங்கள்! தேடுங்கள்!! தேர்ந்தெடுங்கள் என்று மந்திர சாஸ்திரம் சங்கொலி எழுப்புகிறது.

இருட்டிலிருந்து கண்ணைத் திறந்து பார்க்கிறபோது, வெளியிலே வெளிச்சங்கள் தெரிவதில்லை. மனதுக்குள் மட்டும்தான் ஏதோ வெளிச்சம் தெரிகிறது. அந்த வெளிச்சம் என்ன? அந்த வெளிச்சத்தை மீண்டும் மீண்டும் தேடிக் கொண்டே இருந்தால், தூண்டிக் கொண்டே இருந்தால், அந்த வெளிச்சம் ஆற்றல் மிக்க அறிவு ஒளியாக அவரிடத்தில் இருந்து வெளிப்படும். அந்த அறிவு ஒளி உண்மையான ஞான ஒளி - பிரஞ்ஞான ஒளி - சிறந்த மெய்ஞ்ஞான ஒளி.

ஒளிகளைக் கொடுத்து மனிதனின் கிலிகளைப் போக்குவதுதான் மந்திரங்கள். இந்த மந்திர ஒளிகள் நல்ல குருமார்களால் ஏற்றி வைக்கப்பட்டால், அது அவனுக்கும், அவனைச் சார்ந்தவர்களுக்கும் வெளிச்சத்தை விரிவாக்கி வீசுகிறது. இந்த ஒளிகள், புதிர் ஒளிகளாக இல்லாமல், ஞானக் கதிர் ஒளிகளாக விளங்குகிறது. நாம் தேட வேண்டியது நல்ல குருவை. அவர் நம்முடைய கையையும், பையையும் பார்க்காதவராக இருக்க வேண்டும். அவர் நம்முடைய மனத்தையும், நம்முடைய குணத்தையும் நேசிப்பவராக இருக்க வேண்டும். மணக்காத பூக்களுக்கு சொந்தக்காரர்களும், வாடிய பூக்களின் வியாபாரிகளும் மிக மிக எளிதாகக் கிடைப்பார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உண்மையான குருமட்டும் தேடித் தேடி கண்டுபிடிக்க வேண்டியவர். சில சமயங்களில், உண்மையான குருமார்கள் தக்ஷிணாமூர்த்தியைப் போல, பேசாமல் பேசுபவராக இருப்பார். நீங்கள் சனகாதி முனிவர்களாக இல்லையென்றாலும், உண்மை குரு வயதில் பெரியவரா? சிறியவரா? என்று ஆராய்ச்சி செய்யாமல் கை கட்டி, வாய் பொத்தி, மெய் நிறுத்தி அங்கேயே நில்லுங்கள்! குரு உங்களை கோபித்தாலும், அரவணைத்தாலும், பாராட்டினாலும் பாகுபாடு பார்க்காமல் நின்ற இடத்திலேயே சரியாக சலனமில்லாமல் நிமிர்ந்து நில்லுங்கள். அப்பொழுது கருணைக் கடலான குருவின் அலைகள் உங்கள் மீது தொட்டுத் தடவிச் செல்லும். உங்கள் பழைய பாப மூட்டை முடிச்சுகளை, அந்த அலைகள் கடலில் கொண்டுபோய் சேர்த்து விடும். அவர்கள் மூலம் நீங்கள் உச்சித் தலத்தில் மெச்சும்படி திகழலாம். குருமார்கள் உங்கள் உருவுக்குள்ளேயே இணைந்து, இருவரும் ஒருவர் என்ற நிலையை எடுத்துக் காட்டுவார்.

இந்தப் பேருண்மையான பெருவழிப் பாதையில் நடந்து செல்கிறவர்கள், நல்ல மந்திர ஜோதியை கண்டுகளிப்பார்கள். இவர்களுக்கு உச்சிஷ்ட மஹா கணபதி வெகு விரைவில் சித்திப்பார்.

கணபதி மந்திரங்கள் முப்பத்திரெண்டு வகையிலும் சற்று கூடுதலாகவே விளங்குகின்றன. ஒவ்வொரு கணபதி மந்திரத்துக்கும் தனித்தனி ரிஷி, சந்தஸ் என்று விளங்குகின்றது. தேவதையும் இப்படித்தான். கணபதி உபாஸனை என்பது பொங்கு மாங்கடல் என்று சொல்லலாம்.

பொங்கு மாங்கடல் என்றால் என்ன?

ராமேஸ்வரத்தில் அலைகளே இல்லாமல் சமுத்திரத் தாய் தூங்கிக் கொண்டு இருக்கிறாள். அங்கு சிறு அலைகள் மட்டும் ஆடி அசைந்து மெல்லிய குரலில் தாலாட்டு பாடிக் கொண்டேயிருக்கும். ஆனால் குமரியில் போய்ப் பாருங்கள் - கூத்தாடியைப் போல ஓடுவதும், சாடுவதும், பாறையிலே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முட்டுவதும், கொட்டி கலகலவென்று நீர்த் திவலைகளாய் சிரிப்பதுமாய் இருக்கும். ஒரு இடத்தில் மயான அமைதி. மற்றொரு இடத்தில் கூத்தடிப்பு, கும்மாளம். இந்த உண்மையே கடல் பொங்கிப் பொங்கி, பொங்கு மாங்கடலாக தோன்றுகின்ற தோற்றம். அறிவு அலைபாயக் கூடாது. எல்லாம் பாதை தவறாத, ஓசை குறையாத நடனச் சிலம்பொலியாகவே இருக்க வேண்டும். ஜதி தவறாத, ஸ்வரம் பிறழாத, தாளக்கட்டு தளராத நடனம்தான் பொங்கு மாங்கடல்.

இப்பொழுது கணபதி உபாஸனையை நன்கு புரிந்து கொண்டு இருப்பீர்கள். கணபதி மட்டுமல்ல, மற்றும் பல உபாஸனைகளும் இப்படித்தான். எந்த உபாஸனையாக இருந்தாலும் ஜதி, ஸ்வரம், தாளம், லயம், இந்த நான்கும், அது அதன் தன்மையிலிருந்து வழுவாமல் இருக்க வேண்டும்.

ஒரு நதி மற்றொரு பெரிய நதியோடு கலக்கும்போது ஒன்றாகிறது. தனித்து தானேயாக வளைந்து, நெளிந்து செல்லும்போது தனித்து இருக்கிறது. கன்னியும், காளையும் தனித்து இருக்கும்போது, கன்னியாய், காளையாய் இருக்கிறார்கள். இணைந்து இருக்கும்போது–"இல் வாழ்வினராய்" இருக்கிறார்கள்.

இந்த உண்மைகளெல்லாம் நன்றாக தெரிவதற்காகத்தான் குரு வேண்டும், வேண்டும் என்று அடிக்கடி சொல்கிறோம். குரு என்பவருக்கு ஒட்டு மொத்தமாக எல்லாம் தெரிந்து இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. அவர் எந்த பாதையிலே போகிறாரோ, அந்த பாதையில் மட்டும் நிறை அறிவு இருந்தால் போதும். மற்ற பாதைகளையும் தமக்கு தெரியும் என்றோ, தான் அறிந்ததைப் போல மற்றதும் இருக்குமென்றோ கற்பனை ப்ரேவசம் செய்யக் கூடாது. எல்லா மந்திர வழிபாடுகளும் ஒரே கோணத்தில் செல்பவை அல்ல.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒவ்வொன்றின் புறப்படும் இடம், தங்கும் இடம், சேரும் இடம் வேறுபட்டன. ஒரு மந்திரத்தை துவக்கிவைப்பவருடைய மும்ஒலிவலியும் கொண்டு செலுத்தினால் கொள்கலன் அளவும், செலுத்தியின் கொண்டு செல்லும் ஆற்றலையும் பொறுத்து ஒரு மந்த்ரம் வேகமாகவே விளங்குகிறது. சுருங்கச் சொன்னால் குருவின் தன்மையும், சீடனின் தன்மையும் பொறுத்தும் மந்திரம் இயங்குகிறது.

எனக்குத் தெரிந்து ஒரு பெரியவர் இருந்தார். அவர் மந்திர நூல்களில் நிறை ஆற்றல் பெற்றவர். அவர்களுக்கு சீடர்கள் பொறுக்கு விதைகளைப்போல. ஏனென்றால் அவர் தன்னிடத்தில் உபதேசம் கேட்டு வரும் சீடர்களை, அவர்களுடைய இயக்க இயல்புகள், ஜாதக இயல்புகள் எல்லாவற்றையும் ஒப்பு நோக்கி அவனுக்கு இதுதான் ஏற்றது என்று முடிவுகட்டி அந்த மந்திரத்தைத் தான் கொடுப்பார். இதனால், அவர்களிடத்தில் தங்கள் விருப்பப்படி மந்திரங்களை கேட்டுப் பெறவே முடியாது. சிலரிடத்தில் தெளிவாகவே சொல்லுவார். இந்த மந்த்ரம் உனக்கு சத்ரு - அரி எனவே கூடாது என்பார்.

உழாமலே அறுவடை செய்ய நினைப்பவர்களும், உழுது உடனே கதிரை எதிர்பாப்பவரும், நிலமே இல்லாமல் விவசாயம் செய்பவரும், இவரிடத்தில் நிற்காமல் ஓடி விநியோகஸ்தர்களிடம் விருப்பு மந்திரங்களை பெற்று பலிக்காமல் மந்திரம் குரு, சாஸ்திரம் வெறுக்கும் மனிதர்களாக விளங்குவார்கள்.

உச்சிஷ்ட கணபதி, சிஷ்ட கணபதி; அவர் உபாஸகர் களுக்கு இஷ்டகணபதி-எல்லா கஷ்டங்களையும் போக்கும். அபீஷ்ட கணபதி. உச்சிஷ்ட கணபதியிடம் நல்ல உபாசகன், நல்ல தோழனைப்போல் பழக முடியும்.

இந்த மந்திரத்தை எப்படி உபதேசம் பெற வேண்டும் என்பதில் நிறைய மறைப்புகள் (அதாவது ரகசியங்கள்) உள்ளன. அதர்வண வேதம்போல உச்சிஷ்டகணபதி மந்திரமும் மிக மிக பலன்களை வாரி வழங்கக் கூடியது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உச்சிஷ்ட மகாகணபதி மற்ற எல்லா கணபதிகளுக்கும் மாறுபட்டவராக விளங்குகிறார். தத்துவ நிதி என்ற நூல் உச்சிஷ்ட கணபதியின் ஸ்வரூபத்தை நன்கு விளக்குகின்றது. மாதுளம்பழம், நீலோத்பலம், வீணை, நெற்கதிர், குண்டுமணி ஜெபமாலை ஆகியவற்றை நான்கு கரங்களிலும் தாங்குபவர் உச்சிஷ்ட கணேசர் என்று சொல்லப்படுகிறார். இந்த வடிவம் மந்திர சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட உச்சிஷ்ட கணபதிக்கு வேறுபட்டதாக விளங்குகின்றது. மற்றொன்று, பாணம், வில், பாசம், அங்குசம் இவற்றை நான்கு கரங்களில் தரித்துக் கொண்டிருப்பவரும், சிவந்த தாமரை மலரில் வீற்றிருப் பவரும், ஆடையற்ற தன் மனைவியுடன் கேளிக்கையில் ஈடுபட்டவருமாக உச்சிஷ்ட கணேசர் விளங்குவதாக விவரிக்கிறது.

உச்சிஷ்ட கணேசர் அஷ்டாவிம்சதி அட்சரமாக விளங்குகின்றவர். ஆதித்யன், சம்பு இவர்களின் ஒத்த வடிவமாக விளங்குகின்றவரும், இரத்தின த்வீபம் நடுவில் விளங்குகின்றவரும், ஜெபா புஷ்பத்தில் பிரியமுள்ளவரும் வல்லபையை வாம பாகத்தில் ஏற்றவரும், மூல மந்திர ஜெப பூஜையினால் பிரியப்படுகிறவரும், வராக மூர்த்தியினால் பூஜிக்கப்படுகிறவரும், கௌமாரியினால் போற்றப் படுகிறவரும், வாராஹி, இந்திராணி, சாமுண்டா, மகாலக்ஷ்மி போன்ற மாத்ரு கணங்களால் பூஜிக்கப்பட்ட பாதங்களை யுடைவரும், ஐராவதத்துடன் விளங்கும் வஜ்ரேஸ்வரனான இந்திரனால் பூஜிக்கப்படுபவரும், குதிரை வாகனத்தில் வருகின்ற சக்திகளால் போற்றப்படுகிறவரும், எருமை மாட்டின் மீது வரும் எமதேவனால் பூஜிக்கப்படுபவரும், மஹா வாராஹியினால் போற்றப்படுகிறவரும், அஸ்வ வாகன சோம தேவனால் ஏற்றப்படுகிறவரும், ரிஷப வாகன திரிசூலேஸ்வரரால் பூஜிக்கப்படுபவரும், உபாஸனை செய்கிறவர்களின் குறைகளை நீக்கி வைப்பவரும், எதிரிகளின் வாக்கை அடக்கி வைப்பவரும், உச்சிஷ்ட பிராமணர்களுக்கு அளிக்கும் சந்தர்பணையால் சந்தோஷம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அடைகின்றவரும், உச்சிஷ்டமான வஸ்துக்களில் பிரிய முடையவரும், மதுபானத்தில் விருப்பமுடையவரும், மது ஸ்தானத்தில் ஆசையுடையவரும், மந்திர தர்ப்பணங்களில் ஆசையுடையவரும், காதம்பரி தேவியினால் பிரியப்படுகிற வரும், தேங்காய் ரசத்தில் ஆசையுடையவரும், தென்னை மதுவில் பிரியமுள்ளவரும், சுக்ல தாதுக்களை ரட்சிப்பவரும், அவல் பாயசத்தில் பிரியமுள்ளவரும், பித்ருக்களால் ஏற்றப்படுகிறவரும், மாசி பத்ரம், பிருஹதீ பத்ரம், தூர்வாயுக்தம், துர்தூரதளம், விஷ்ணு கிராந்தம், கண்டலீ பத்ரம், அர்க பத்ரம், அர்ஜுன பத்ரம் இவைகளால் அர்ச்சிக்கபடுகிறவரும், மந்தார குசுமத்தில் பிரியமுள்ளவரும், வகுள புஷ்பார்ச்சனையால் சந்தோஷமடைகிறவரும் துர்தூர புஷ்பத்தினால் மேலும் பிரகாசம் அடைகிறவரும், ரஸால புஷ்பத்தினால் உபாஸகர்களை காப்பாற்றுகிறவரும், கேதகி புஷ்பத்தினால் சந்தோஷம் அடைகிறவரும், துர்தூரம், ரஸாலம், கேதகி, பாரிஜாதம், மாதலி, சம்யா மலர்களால் மந்திர அர்ச்சனை செய்ய பிரியப்படுகிறவரும், லட்சம் செந்தாமரை மலர்களால் அர்ச்சிக்கின்றவர்களை அணிமாதி சித்திகளை கொடுத்து அவர்களை உயர்த்து கின்றவராக விவரிக்கப்படுகிறவரும், அஷ்டாவதான உபாஸகர்களுக்கு கைவரச் செய்கின்றவரும்; சதாவதான போஷகர்களாக உபாஸகர்களை விளங்கச் செய்கிறவரும்; எல்லா நோய்களையும் தீர்ப்பவரும்; விடாப்பிடியான ஜுரங்களை நீக்குகின்றவரும்; கண் நோய்களை போக்குகின்றவரும்; அன்றாட ஜுரத்தை போக்குகின்றவரும்; காச நோய்களை நீக்குகின்றவரும்; எல்லா ஆபத்துக்களிலிருந்தும் நீக்குகின்ற வரும், யஸஸ் நிறைந்த தனத்தை வழங்குகின்றவரும். பேராற்றலையும், பேரறிவையும் வழங்குகின்றவரும், நினைத்ததை அளிக்கும் சிந்தாமணி வடிவாக விளங்குகின்ற வரும், தாபத்ரயங்களை போக்குகின்றவரும், துர்மரணம், அகால மரணம், மகா வியாதிகளை போக்குகின்றவரும், பிரம்ம வித்தையை வளர்க்கின்றவரும், வாமாசார பூஜையில் பிரியப் படுகிறவரும், நவாக்ஷரி மந்திர ராஜராக விளங்குகின்றவரும், ஏகாக்ஷரி மந்திர வடிவாக விளங்குகின்றவரும், மூன்று வாரம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மூல மந்திரத்தை முறைப்படி ஜெபிப்பவர்களுக்கு நிறைந்த அருளை வழங்குகின்றவரும், ஸ்ரீசக்ரத்தில் விளங்கும் அணிமா, லகிமாதி தேவதைகளைப் போலவே, சர்வ வஸ்யாதி காரியங்களில் வெற்றி தருகிறவரும், க்ஷிப்ர சந்தோஷமாக விளங்குகின்றவரும், காவேரி தீரம், சோணபத்ரம், நர்மதா, தாமிரபரணி, மகாசரஸ்வதி, மகாநதி, பிரம்மபுத்திரா நதிகளின் வடிவாக விளங்குகின்றவரும், நதிகளிலும், குளக்கரைகளிலும் வாசம் செய்கின்றவரும், ரிஷ்ய சிருங்கரால் பூஜிக்கப்பட்டவரும், ஹரித்ரா பிம்ப வடிவில் விளங்குகின்றவரும், நிம்ப மரத்தில் செய்த பிம்பத்தில் என்றென்றும் பூஜிக்க நிரந்தரமாக விளங்குகின்றவரும், அரசமர அடியில் நிரந்தரமாக வாழ்கின்றவரும், ஆலமர அடியில் வாழ்ந்து வளம் தருபவரும், வேப்பமர அடியில் மூலஸ்தானம் கொண்டு விளங்குகின்றவரும், அரச மரமும், வேப்ப மரமும் திருமணம் செய்த இடத்தில் மிகப்பிரியமான மூர்த்தியாக விளங்குகின்றவரும், கந்தர்வர்களாலும், சித்தர்களாலும் பூஜிக்கப்படுபவரும், தண்ணீர், சந்தனம், கம்பீர புஷ்பம், கஸ்தூரி, இவைகளால் ஜலதர்பணம் செய்யப் பிரியப்படுகிறவரும், ஏரண்ட தைலத்தில் ஸ்நானம் செய்யப் பிரியப்படுகிறவரும், அஷ்ட திரவியங்களால் பூஜிக்கப் படுபவரும், தயிரினால் ஹோமம் செய்யப்படுகிறவரும், சால்யா அன்னத்தால் நிவேதிக்க மிகவும் சந்தோஷப்படுகிறவரும், தண்டுலம், திலதைலம் இவைகள் கலந்த அன்னத்தில் பிரியப்படுகிறவரும், அபமார்க்க சமித்து ஹோமத்தினால் பிரியப்படுகிறவரும், ஏரண்ட சமித்து ஹோமத்தினால் வித்வேஷணத்தை செய்து வைக்கின்றவரும், திலாதிகளால், நான்கு ஆவர்த்தி ஹோமம் செய்வதினால், சர்வ பிராணிகளையும் வசப்படுத்துகின்றவரும், கணபதிக்கு பிரியமான பற்பல திரவியங்களால் ஹோமம் செய்வதினால், ஆகர்ஷணாதிகளை செய்துவைப்பவரும், போகங்களை தந்து நிறைப்பவரும், யோக மோக்ஷாதிகளுக்கு காரணம் ஆனவரும், எல்லா வசியகாரியங்களுக்கும் மூலகாரணமாக விளங்குகின்றவரும், அதர்வண மந்திரத்தில் பிரியமுடையவரும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிருஷ்ணாஷ்டமியில் பூஜிக்கின்றவர்களுக்கு, அவர்கள் விரும்பும் பலன்களை அளிப்பவரும், சூரியோதயத்தில் பூஜிக்கின்றவர்களுக்கு மிக பிரியமானவரும், இக்ஷு பட்சணங்களில் மிக பிரியமுடையவரும், சாம்பவியில் பாலர் ஆனவரும், கற்பூர திலகத்தை அணிந்து கொண்டவரும், தியான யோகத்தில் சந்தோஷம் அடைகிறவரும், தன தான்யங்களை அளித்து துர்பிக்ஷங்களை போக்குகின்றவரும், யக்ஞங்களில் ஆசையுடையவரும், ஸ்ரீ வித்யா உபாஸனையில் மிகவும் பிரியம் உடையவரும், ஷட்கோண பிந்து மத்தியில் வாழ்வதில் பிரியமுடையவரும், ஹவனங்களில் ஆசையுடையவரும், மஞ்சளால் அர்ச்சிக்க பிரியப் படுபவரும், நீலவாணியுடன் வாழ்கின்றவரும், வக்ரதுண்டராக விளங்குகின்றவரும், ஒற்றைக் கொம்பையுடையவரும், கோவிந்தவடிவில் விளங்குகின்றவரும். (இவர் சம்ஹாரரூபர்). ஈஸ்வரனாகவும், சதாசிவனாகவும் விளங்குகின்றவரும், பஞ்ச கிருத்தியங்களை செய்கின்றவரும், சர்வாத்ம வடிவில் விளங்குகின்றவரும், பாற்கடலின் மத்தியில் வாழ்கின்றவரும், நீலவாணியை விவாகம் செய்து கொண்டவரும், நீல சரஸ்வதி ஜபத்தை சித்திக்கச் செய்கிறவரும், ஹஸ்தி முகமுடையவரும், லம்போதரர், ஏகதந்தர், உச்சிஷ்டர் என்று பெயர்பெற்றவரும், ஆம், க்ரோம், ஹ்ரீம், கம் என்ற பீஜங்களின் வடிவாக விளங்குகின்றவரும், கே கே ஸ்வாஹா சப்தபிரியரும், இன்மை வடிவானவரும், பாலாரிஷ்டத்தை போக்குகின்றவரும், குருவாலும் சீடனாலும் நமஸ்கரிக்கப்படுகின்றவரும், குருமண்டல பூஜை செய்வதில் ஆசையுடையவராய் விளங்குகின்றவரும், சக்தி இணைந்த வடிவாக விளங்குகின்றவரும், ஷோடசாந்த நிலையில் வாழ்கின்றவருமாக இப்படி உச்சிஷ்ட கணபதியின் பெருமை வெகுவாக - பேசப்படுகின்றது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



உச்சிஷ்ட மஹா கணபதி மிக மிக எளிதில் உபாஸகர்களுக்கு ஸித்திக்கிறவர். இவர் எவ்வளவு சுலபமானவர் என்பதை, இந்த கணபதி உபாஸகர்கள் ப்ரத்யக்ஷமாக ஒவ்வொரு நாளும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசாரங்களை மட்டுமே மூலதனமாக கொண்டவர்கள், உச்சிஷ்ட கணபதியை பூஜை செய்ய வேண்டாம். ஏன் இப்படி சொல்லுகிறேன் என்றால், உச்சிஷ்ட கணபதி அவ்வளவு சுலபர்; ஆசாரங்களை அவரிடம் திணிக்க வேண்டாம். நீங்கள் அனுஷ்டான சித்தர்களாக இருங்கள்; ஆசார சித்தர்களாக இருக்காதீர்கள். இது உங்களுக்கும் நல்லதல்ல, உங்கள் உபாஸனைக்கும் உகந்ததல்ல.

உபாஸகனுடைய அங்குஷ்ட ப்ரமாணம் வெள்ளெருக்க கணபதியை ஆவாஹன உபசாராதிகளுடன் கூடிய பூஜை செய்து, அந்த பிம்பத்தில் உச்சிஷ்ட மஹா கணபதியை எழுந்தருளச் செய்து, நல்ல கொம்புத் தேனால் தாரைபோல் விடாமல் தொடர்ந்து, அவர் மந்திரத்தை சொல்லிக் கொண்டு அபிஷேகம் செய்யவேண்டும். இப்படிச் செய்யப்பட்ட இந்த விக்ர றம் கண் உள்ளவர்களுக்கு காட்சி கொடுக்கும், காது உள்ள ர்களிடம் மற்றவர் ரகசியங்களை பேசும். வலது தோளில் அமர்ந்து கொண்டு ப்ரவாஹ வாக்கு கொடுத்து விவாதத்தில் வெற்றி தரும். நல்ல ப்ரகாசமான உபாஸகர்கள், இத்தகு உபாஸகர்கள் வரும்பொழுது, தம் இரு கண்களால் பார்த்தால் அவர்கள் தோளிலே உச்சிஷ்ட மஹா கணபதி பெருமான் அமர்ந்திருப்பது நன்றாக தெரியும். வருகின்ற உபாசகர்களிடம் தம் வாக்கு வலிமையைக் காட்டாமல், நீல சரஸ்வதியோடு கூடிய இந்த கணபதியை ஸ்தோத்தரித்து விட்டால், இருவருமே நிரந்தர நீண்ட நாள் நட்பினர்களாக ஒன்று சேர்ந்து விடுவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேய்பிறை பஞ்சமி துவங்கி, வளர்பிறை சதுர்தசி வரை ஒவ்வொரு நாளும் 4,000 ஜபம் செய்து அதனுடைய அங்கங்களை பூர்த்தி செய்தால் இந்த ஜபம் ஸித்திக்க எளிய வழியும் ஏற்ற வழியும் இதுவே. மற்றும் குயவன் செய்த மண்ணில் உச்சிஷ்ட கணபதி ப்ரதிமையை பூஜை செய்பவனுக்கு ராஜாங்க காரியம் வெற்றியாகும். புற்று மண்ணில் செய்த உச்சிஷ்ட கணபதியை நுனிவாழை இலையில் வைத்து, கணபதி பத்ரங்களால் மூல மந்த்ர அர்ச்சனை செய்து வந்தால், தான் செய்கின்ற வியாபாரத்தில் வெற்றியும், இஷ்ட காம்ய பூர்த்தியும் ஏற்படும்.

அச்சு வெல்லத்தில் உச்சிஷ்ட கணபதியை ஆவாஹனம் செய்து, காம்பு கிள்ளாத வெற்றிலையின் நடுவில் வைத்து, மூலமந்த்ர ஜபம் செய்தால் நல்ல சௌபாக்கிய திரவியங்கள் கிட்டும். கல் உப்பை வெள்ளிக் கிண்ணத்தில் இட்டு, அதன் மீது பன்னீரை ஊற்றி கரையச் செய்து, அதை காலை ஆறு மணி முதல் குரு ஹோரை நிறைவு வரை வெயிலில் உலர்த்திக் கொண்டு வந்து, கையினால் பிள்ளையார் பிரதிமை படைத்து, இதை வெள்ளித் தாம்பாள நடுவில் வைத்து மூலமந்திரத்தால் ஜபம் செய்தால், எதிரிகள் பிரச்சனைகள் விலகும். வேப்ப மர மத்திய வேர் பாகத்தில் செய்த உச்சிஷ்ட கணபதியை செப்புத் தாம்பாளத்தின் நடுவில் வைத்து, அதன் மீது அவரவர் வயது என்னவோ, அதில் மூன்றில் ஒரு பாகத்திற்கு அரைத்த மஞ்சள் நீரினால் அபிஷேகம் செய்து, அலங்காரங்கள் செய்து, அலங்காரத்தில் வேப்பம்பூ அல்லது அதனுடன் திருநீற்றுப் பச்சையையும் கலந்து மூலமந்த்ர ஜபம் செய்தால், உபாஸகனின் எதிரிகள் ஊர் பெயர்ந்து போவார்கள். இதன் பிறகு அவர்கள் இவன் திசைக்கே வரமாட்டார்கள்.

சந்தனக் குழம்பு அல்லது கட்டையில் செய்யப் பெற்ற உச்சிஷ்ட கணபதிக்கு செந்தாமரைத் தண்டு திரியினால் யக்ஞோபவீதம் செய்து, தேவையான அளவு நெல் பொறியை எடுத்துக்கொண்டு அதனுடைய அளவில் சரிபாதி நெய்யைக் கலந்து பூராசர்க்கரையை அதன் மீது இட்டு, இந்தக், கலவை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொள்ளும்படியான ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் இட்டு இது முழுகும்படியாக தேனை நிரப்பி கலந்து, அதன் மீது ஒரு வாழைக் கிழிசலை மூடி உச்சிஷ்டக் மஹா கணபதி மந்த்ரத்தால் மந்திரித்து, கணபதி ஹோமத்தில் ஆஹுதி கொடுத்தோ, அல்லது அவருக்கு நிவேதித்தோ, உபாஸகன் இதை பிரசாதமாக ஏற்றுக்கொண்டு, இதை சாப்பிட அவனுக்கு உலக மக்களிடத்தில் கீர்த்தி ஏற்படும், தெய்வ மந்திரங்கள் கணீர் கணீரென்று பலிக்கும்.

எதிரிகள் வச்யத்துக்கு, தனது சொந்தப்படுக்கையில் அமர்ந்து கொண்டு ஜபிப்பது சிறப்பு. எதிர்பாராத விதமாக உறங்கிவிட்டாலும் காரியம் கைகூடும். படுக்கையோ உறக்கமோ தீட்டல்ல. நிம்ப எண்ணெயில் கடுகு புஷ்பத்தை இட்டு அவரவர் வயது எவ்வளவோ அவ்வளவு ஜபம் செய்து, இதை தீபமாக ஏற்றினாலோ, ஹோமத்தில் இட்டாலோ எதிரிகளை எங்கே தேடுவது என்று அலைய வேண்டும்.

உச்சிஷ்ட கணபதியின் நிவேதனத்தின் சேஷம் மிக மிக சிறப்பான ஔஷதம். இதை வாயில் இட்டு மென்று கொண்டே ஜபம் செய்கிறவன், உச்சிஷ்ட மஹா கணபதிக்கு இஷ்டன் ஆகிறான். இப்படிச் செய்கிறவனுக்கு நூற்றுக்கணக்கான மந்திரங்கள் கேட்காமலேயே அவன் இதயத்தில் புகும்.

இதைப் போலவே நூற்றுக்கணக்கான பிரயோகங்கள் ஒவ்வொரு தெய்வத்திற்கும் விளங்குகின்றன. அவைகளில் எவை எவை நலம் தருமோ, பலன் தருமோ அவ்வகளை மட்டுமே இங்கே சொல்லியிருக்கிறோம். தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கவேண்டும் என்பதுதான் கணபதி உபாஸனையின் உட்பொருள். உச்சிஷ்ட மஹா கணபதி உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் வாழ வைப்பார். உங்கள் இடையூறுகளை எல்லாம் போக்கி, உங்களை உலகம் அறிந்த ஒருவராக ஆக்கி வைப்பார்.

நீங்கள் தரையில் நடந்து போனால், உச்சிஷ்ட கணபதி உங்களோடு நடந்துவருவார். நீங்கள் வண்டிகளில் பயணித்தால், வண்டிகளில் உங்கள் அருகில் அவர் அமர்ந்திருப்பார். உங்கள் பயணத்தில், உங்கள் வலப்புறத்தில் சிறிது இடம் விட்டு வையுங்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மந்திர சாஸ்திர பிரயோகம்

உச்சிஷ்டகணபதி மஹா மந்த்ரம் எல்லா கணபதி மந்திரங்களிலும் தலையாயது. எல்லா மந்திரங்களிலும் வைரக்கல்லாக ஒளிவிடுவது இந்த மந்த்ரம்.

"*ஹஸ்தி பிசாசி லிகே ஸ்வாஹா*" என்ற இந்த் ஒரு மந்திரமே நவரத்ன மந்திரம் என்று அழைக்கப்படுகிறது. அஷ்டமாசித்திகளின் ஆரம்பமாகவும், முடிவாகவும் இந்த "*ஹஸ்தி பிசாசி லிகே ஸ்வாஹா*" என்ற மந்திரம் கருதப்படுகிறது. எளிமைக்கும், வலிமைக்கும் பேர்போனது இந்த மந்திரம். இந்த மந்திரத்தை உபதேசம் செய்யாமல் ஜபிப்பது மஹாபிழை. இந்த நவார்ண மந்திரம் நவசித்திகளின் தாயகம். இந்த மந்திரம் சித்திக்க ஒரு லட்சம் தடவை ஜெபம் செய்யவேண்டும் என்று மந்திர மஹோததி என்ற மந்திர சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது.

இந்த மந்திரம் ஜெபம் செய்ய ஏற்ற ஜெபமாலை வெள்ளெருக்கு வேரில் செய்த மாலை. கெட்டிக்கார உபாஸகன் வெள்ளெருக்கம் பூவினால் ஜெபம் செய்து, அந்த பூவை தேனில் தோய்த்து, ஒவ்வொரு தடவையும் மூல மந்திரம் சொல்லி, புரச்சரணை ஹோமத்தில் ஆஹுதி கொடுக்க, புரச்சரணையில் சிறந்த வித்யைகளை அடைவான். இவ்விதம் ஜெபம் செய்ய எடுத்துக்கொள்ளும் வெள்ளெருக்கம் பூ, தரையில் விழாததாகவும், முற்ற முழுதும் மலர்ந்ததாகவும் இருக்க வேண்டும். வெள்ளிக்கிண்ணத்தில் தேனை வைத்துக்கொண்டு, வெள் ளெருக்கம் பூவின் காம்பை கையில்பிடித்துக் கொண்டு தேனில் முக்கி ஆஹுதி கொடுக்க சகல சௌபாக்கியங்களும் கிட்டும்.

ஒரு மனிதன் நல்வாழ்வை அடைய, அச்சு வெல்லத்தை ஆஜ்யத்தில் முழ்கவைத்து ஆஹுதி கரண்டியால் ஆஹுதி கொடுக்க, சகல நன்மைகளும் கிடைக்கும்.

பொதுவாகவே, உப்பிலிட்ட பண்டங்களை ஹோமத்தில் இடுவது என்றால், சற்று நிதானிப்பார்கள், ஆனால் கல்உப்பை மூன்று விரல்களில் எடுத்துக்கொண்டு, (கட்டை விரல், ஆட்காட்டிவிரல், நடுவிரல்) இந்த மூன்று விரல்களினால் ஹோமம் செய்தால் சத்ருக்கள் விலகிப்போவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சத்ரு உபாதை அதிகமாக இருந்தால், வேப்பங்குச்சியினால் அல்லது அதைவிட சிறந்த மலைவேம்பு குச்சியை ஆஜ்யத்தில் முக்கி ஹோமம் செய்ய, சத்ருக்கள் அழிந்து போவார்கள். எல்லா உலகங்களும் தனக்கு வசமாக, லாஜம் என்ற நெற்பொறி, ஆஜ்யம், மது, சர்க்கரை இவைகள் கலந்த கலவையால் ஹோமம் செய்தால், அகில உலகங்களிலும் கீர்த்திவானாக விளங்குவான்.



பொதுவாகவே உச்சிஷ்ட கணபதி மஹா மந்திரத்தை, சாப்பிட்டுக் கொண்டே ஜெபம் செய்வது உயர்வு என்பார்கள். உச்சிஷ்ட கணபதிக்கு நிவேதனம் செய்த தேங்காய், கொழுக்கட்டை, மோதகம் இவைகளை சிறிது சிறிதாக மென்றுகொண்டு மனதினாலும், வாயினாலும் உச்சிஷ்ட கணபதியின் இந்த நவார்ண மந்திரத்தை ஜெபம் செய்ய, உச்சிஷ்ட கணபதி வச்யமாவதுடன், எதிரிகளுடன் விவாதத்தில் வெற்றியும், தன்னுடன் வாயாட வருபவர்களை வாயடக்கச் செய்துவிடுவார்.

ருத்ர யாமளம் என்ற மந்திர சாஸ்திரத்தில், "கிருஷ்ண சதுர்த்தி துவங்கி சுக்ல சதுர்த்தி முடிய பூஜை செய்து, தினமும் ஆயிரம் முறை ஜெபம் செய்து, தேனால் அபிஷேகம் செய்து, வெல்லப் பாயசம் நிவேதனம் செய்து, அந்த நிவேதனத்தை உண்டு 'நானே உச்சிஷ்டன்' என்ற உணர்வோடு ஜெபிக்க உச்சிஷ்ட கணேசப் பிரியனாவான்." என்று கூறப்பட்டுள்ளது.

வெள்ளெருக்கு அல்லது செஞ்சந்தனத்தால் உச்சிஷ்ட கணபதியை மூர்த்தி ஸ்தாபித்து, அந்தணன் அல்லது குரு சன்னதியில் இந்த நவார்ண மந்திரத்தை 16,000 முறை ஜெபிக்க சித்தி கிடைக்கும். உச்சிஷ்ட கணபதிக்கு ப்ரீதி, ஆராதனை செய்து, இஷ்ட பல நிவேதனம் செய்தால், நிறைந்த செல்வவான் ஆவான்.

செந்நாயுருவியினால் 108 தடவை மந்திர உச்சாடனத்துடன் ஆஜ்யத்தில் தோய்த்து ஹோமம் செய்தால், எல்லாவித சௌபாக்கியங்களும் இவன் அருகே வர காத்திருக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்த மந்திரத்தை ஒரு லட்சம் முறை ஜெபம் செய்வதால் மந்திரம் சித்தியாகும். இந்த மந்திரத்தை பத்தில் ஒரு பங்கு மார்ஜனம், பத்தில் ஒரு பங்கு ஹோமம் முறைப்படி தர்ப்பணம் செய்யவேண்டும். மற்றும் மந்திர மஹோததியில் சொல்லப்படும் சித்திமார்க்கப்படி ஒரு லட்சம் ஜெபம், பத்தில் ஒரு பங்கு ஆஜ்ய ஹோமம், அதில் பத்தில் ஒரு பங்கு தர்ப்பணம் இதற்கு அஷ்ட திரவியங்களை உபயோகிக்க வேண்டும்.

வேம்பு வேரும் உச்சிஷ்ட கணபதி மந்திர சித்திக்கு சிறந்த உபகரணம் ஆகும். நல்ல வேம்பு வேரினால் உச்சிஷ்ட கணபதியை செய்து, அதை தரையில் வைக்காமல் நுனிவாழையிலையில் வைத்து ஆவாகனம் செய்து வில்வம், அருகம்பில், நந்தியாவர்த்தம், மஞ்சள் கொழக்கட்டை மந்தாரை, வெள்ளை கரிசாரங்கண்ணி, மாசிப்பச்சை, கதிர்ப்பச்சை, விஷ்ணு கிராந்தி ஆகிய அஷ்ட புஷ்பங்களினால் பிம்பத்திற்கு அர்ச்சனை செய்து, அதன் பிறகு செஞ்சந்தனம் அல்லது வில்வசந்தனத்தை ஸ்வாமியின் பாதத்தில் வைத்து, பூஜை நிறைந்த பிறகு அந்த சந்தனத்தை நெற்றியிலும், புஜங்களிலும், ஹ்ருதயத்திலும் பூசிக்கொள்ள எல்லாக் காமனைகளும் சித்தியாகும்.

மிக சக்தி வாய்ந்த இந்த மந்திரத்தை இஷ்டப்படி யாருக்கும் உபதேசம் செய்யக்கூடாது. மிக ரகசியமான இந்த மந்திரத்தை நல்லவர்களுக்கு மட்டுமே தரவேண்டும். இதை தருவதற்கு திதி-வாரம் -உபவாசம்-நக்ஷத்திரம் எதுவுமே தேவையில்லை. நினைத்ததையெல்லாம் தரும் கல்பதரு இந்த மந்திரம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அஸ்ய ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி மஹா மந்த்ரஸ்ய -
கங்கோல ரிஷி:
விராட் சந்த:
உச்சிஷ்ட கணபதிர் தேவதா
அகிலாப்தயே ஜபே விநியோக:

ரிஷியாதி ந்யாஸம்

ஓம் கங்கோல ரிஷயே நம: (தலை)
ஓம் விராட் சந்தஸே நம: (முகம்)
ஓம் உச்சிஷ்ட கணபதி தேவதாயை நம: (இருதயம்)
விநியோகாய நம: (ஸர்வாங்கே)

கரந்யாஸம்

ஓம் ஹஸ்தி - அங்குஷ்டாப்யாம் நம:
ஓம் பிஸாசி - தர்ஜனீப்யாம் நம:
ஓம் லிகே - மத்யமாப்யாம் நம:
ஓம் ஸ்வாஹா - அநாமிகாப்யாம் நம:
ஓம் ஹஸ்தி பிஸாசி லிகே - கனிஷ்டிகாப்யாம் நம:
ஓம் ஹஸ்தி பிஸாசி லிகே ஸ்வாஹா -
க்ரதலகரப்ருஷ்டாப்யாம் நம:

அங்க ந்யாஸம்

ஓம் ஹஸ்தி - ஹ்ருதயாய நம:
ஓம் பிஸாசி - சிரஸே ஸ்வாஹா
ஓம் லிகே - சிகாயை வஷட்
ஓம் ஸ்வாஹா - கவசாய ஹும்
ஓம் ஹஸ்தி பிஸாசி லிகே - நேத்ரத்ரயாய வௌஷட்
ஓம் ஹஸ்தி பிஸாசி லிகே ஸ்வாஹா - அஸ்த்ராய ஃபட்

'ஓம் பூர்புவஸ்ஸுவரோம்' இதி திக்பந்த:

த்யானம்

சதுர்புஜம் ரக்ததனும் த்ரிநேத்ரம்
- பாசாங்குசௌ மோதக பாத்ர தந்தௌ
கரைர் ததானம் ஸரஸீருஹஸ்த உன்மத்த
- உச்சிஷ்ட கணேசம் மீடே.

'லம்' இத்யாதி பஞ்ச பூஜை செய்ய வேண்டும்.

மந்த்ரம்

1 1 1
'ஹஸ்தி பிஸாசி லிகே ஸ்வாஹா'

ந்யாஸங்கள், திக்விமோகம், த்யானம், 'ல' இத்யாதி பஞ்ச பூஜை செய்து நிறைவு செய்யவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிறைவுரை

மந்திரசாஸ்திரங்களில் புகழ்பெற்றவராக விளங்குகின்றவர் உச்சிஷ்ட கணேசர். உச்சிஷ்ட கணேசரை பூஜித்து நல்ல வல்லமை பெற்றவர்களில், நம்காலத்திலேயே குறிப்பிட தக்கவர்கள் உண்டு. உச்சிஷ்ட கணபதியை உபாஸனை செய்கின்றவன், தனக்கு ஒத்த உச்சிஷ்ட கணபதி உபாஸகனை அந்த உச்சிஷ்ட கணபதியாகவே பாவிக்கவேண்டும்.

உச்சிஷ்ட கணேச உபாஸகனை தனது இல்லத்திற்கு அழைக்கின்றபொழுது ஏலம், லவங்கம், பச்சைகற்பூரம், ஜாதிக்காய் பொடிகள் கலந்த வெற்றிலை பாக்கை கண்டிப்பாக வழங்கவேண்டும். அதே வெற்றிலை பாக்கை தானும் தரித்துக்கொண்டு உச்சிஷ்ட கணேசரை நினைத்தால், அவனுக்கு கைவராதது ஏதுமில்லை. அதேபோன்று, யானை நடந்த பாதத்தில் அதன் காலடி மண்ணை எடுத்து ஒரு வெள்ளி சம்புடத்தில் சந்தனத்தோடு குழைத்து, அதை அந்த சம்புடத்தில் அடைத்து, அதை தொட்டுக்கொண்டு அல்லது தர்ப்பையின் நுனியால் தொட்டுக்கொண்டு, உச்சிஷ்ட கணேச மூல மந்திரத்தை ஜெபித்து கொண்டு அதை தன் மடியிலேயே வைத்துக்கொண்டு நடந்தால், அவனுக்கு கிடைக்கின்ற வெற்றி வாய்ப்புக்கள் அதிகம். தோல்விகள் இவனை அணுகாது, துக்கம் இவனைத் தொடராது.

இப்படி எடுக்கின்ற யானையடி மண், கிழக்கு பார்த்ததாக உள்ள யானையினுடையதாக இருக்க வேண்டும். யானையின் வலது பாதத்தில் இருந்து மண்ணை எடுக்க வேண்டும். இதைப் பற்றி உச்சிஷ்ட கணேச பழம்பெரும் உபாஸகர்கள் பெருமையாகப் பேசுவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆக்குதற்கும், அளிப்பதற்கும், அழிப்பதற்கும் வல்ல கடவுள் குருபிரான். குருவின் வல்லமை சொல்லிச் சொல்லி நிறையாதது. பஞ்சபாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் குருக்ஷேத் திரப்போர் நடக்கும் பொழுது, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் துணைக் கரத்தை இரு தரப்பினரும் எதிர்பார்த்தார்கள். அர்ஜுனனும், துரியோதனனும் கண்ணனை சந்திக்க கோகுலம் சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் சற்று அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். கௌரவர்களின், தலைவனான துரியோதனன், கிருஷ்ணன் எழுந்ததும் முதலில் தன்னைத்தான் பார்ப்பான் என்று தலைமாட்டில் அமர்ந்திருந்தான். அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனின் பாதத்தில் அமர்ந்து, எழுந்ததும் தன்னைத்தான் பார்ப்பான் என்று அமர்ந்திருந்தான். ஸ்ரீகிருஷ்ணர் ஜெகத்குரு. எல்லா குருவிற்கும் மேம்பட்டவர். அஞ்ஞானத்தை விரட்டி ஞானத்தைத் தருபவர். பகவான் கிருஷ்ணர் விழித்தெழுந்ததும், காலடியில் அமர்ந்திருந்த அர்ஜுனனை பார்த்து என்ன வேண்டும் என்று கேட்டார், அதற்கு அர்ஜுனன் நீ என்னுடன் வந்து எனக்கு தேர் ஓட்டி என்னுடன் இருந்தால் போதும் என்று சொன்னான். ஆனால், துரியோதனனோ, தனக்கு அதிகப்படியான சேனைகள் வேண்டும் என்று கேட்டான், ஸ்ரீகிருஷ்ணர் அதை ஏற்று, அவனுக்கு வேண்டிய படைகளை அனுப்புவதாக ஒப்புக் கொண்டு, யுத்தத்திற்கு வேண்டிய படைகளை அனுப்பி வைத்தார். இந்தப் போரில் கண்ணன் அர்ஜுனனோடு இருந்ததினால், குரு ஒரு மனிதனோடு தொடர்ந்து இருந்ததுபோல இருந்தது. குருவின் காலடிதான் சிறப்பு என்பதினால், அர்ஜுனனுக்கு கிருஷ் ணருடைய துணையும் கிடைத்தது. இது எதை குறிக்கிறது என்றால், நாம் குருவைவிட்டு விலகக்கூடாது என்பதையும் குருவின் பாதம்தான் சிறப்பு என்பதையும் காட்டுகிறது. நீங்கள் குருவின் தலையில் பூவைப் போடுவதைவிட, பணத்தைக் கொட்டு வதைவிட, பூவை குருவின் பாதத்தில் கொட்டுங்கள், பூஜியுங்கள், நீங்கள் புண்ணியவான்கள், நீங்கள் சிறந்த சீடர்கள், உங்கள் வாழ்வு மெய்யாக இருந்து மேன்மையாக முடியும். பொய்யாக இருந்து பொழுதுபோன பிறகு போனதாக இருக்காது. நீங்கள் எப்பொழுதும் குருவையே நினையுங்கள். **"நன்றாக குருவாழ்க குருவே துணை"** இதை சொல்லிக் கொண்டே இருங்கள். நீங்கள் புத்திசாலிகள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உச்சிஷ்ட கணபதி ஸ்தவ ராஜம்

ருத்ர யாமளம்

தேவ்யுவாச -

"பூஜாந்தே ஹ்யனயா ஸ்துத்யா ஸ்துவீத கணநாயகம்
நமாமி தேவம் ஸகலார்த்ததம் தம் சுவர்ணவர்ணம்
புஜகோபவீதம்
கஜானனம் பாஸ்கரமேகதந்தம் லம்போதரம்
வாரிபவாஸனம் ச (1)

கேயூரிணம் ஹாரகிரீடஜுஷ்டம் சதுர்புஜம்
பாசவராபயானி
ஸ்ருணிம் ச ஹஸ்தம் கணபம் த்ரிநேத்ரம்
ஸ சாமரஸ்த்ரீயுகலேன யுக்தம் (2)

ஷடக்ஷரஆத்மானமனல்ப பூஷம் முனீச்வரைர் பார்கவ
பூர்வகைஸ்ச
ஸம்ஸேவிதம் தேவமனாதகல்பம் ரூபம் மனோஜ்ஞம்
சரணம் ப்ரபத்யே (3)

வேதாந்த வேத்யம் ஜகதாமதீசம் தேவாதிவந்த்யம்
சுக்ருதைககம்யம்
ஸ்தம்பேரமாஸ்யம் நனு சந்த்ரசூடம் விநாயகம் தம் சரணம்
ப்ரபத்யே (4)

பவாக்யதாவானல தஹ்யமானம் பக்தம் ஸ்வகீயம்
பரிஷிஞ்சதே ய:
கண்டஸ்ருதாம் போபி ரனன்யதுல்யம் வந்தே கணேசம் ச
- தமோரி நேத்ரம் (5)

சிவஸ்ய மௌலாவ வலோக்ய சந்த்ரம் சுஷுண்டயா
முக்ததயா ஸ்வகீயம்
பக்னம் விஷாணம் பரிபாவ்ய சித்தே ஆக்ருஷ்ட சந்த்ரோ
- கணபோவதான்ன: (6)

பிதுர் ஜடாஜூடதடே ஸதைவ பாகீரதீ தத்ர குதூஹலேன
விஹர்த்துகாம: ஸ மஹீத்ரபுத்ரயா நிவாரித: பாது ஸதா
கஜாஸ்ய: (7)

லம்போதரோ தேவகுமாரஸங்கை: க்ரீடன்குமாரம்
ஜிதவான்னிஜேன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கரேண சோத்தோல்யனனர்த்தரம்யம் தந்தாவலாஸ்யோ
பயத: ஸ பாயாத் (8)

ஆகத்ய யோச்சைர் ஹரிநாபி பத்மம் ததர்ஸ தத்ராசு
கரேண தச்ச

உத்தர்துமிச்சன்விதி வாதவாக்யம் முமோச பூத்வா
சதுரோ கணேச: (9)

நிரந்தரம் சம்ஸ்க்ருத தான பட்டே லக்னாம் து குஞ்ஜத்ப்ர
மராவலீம் வை

தம் ச்ரோத்ரதாலைரபஸாரயந்தம் ஸ்மரேத்கஜாஸ்யம்
நிஜஹ்ருத்ஸரோஜே (10)

விச்வேச மௌளிஸ்தித ஜஹ்னுகன்யா ஜலம் க்ருஹீத்வா
நிஜபுஷ்கரேண

ஹரம் ஸலீலம் பிதரம் ஸ்வகீயம் ப்ரபூஜயன் ஹஸ்திமுக:
ஸ பாயாத் (11)

ஸ்தம்பேரமாஸ்யம் குஸ்ருணாம்கராகம் ஸிந்தூர பூராருண
காந்தகும்பம்

குசன்தனாச்லிஷ்டகரம் கணேசம் த்யாயேத் ஸ்வசித்தே
ஸ்கலேஷ்டதம் தம் (12)

ஸ பீஷ்ம மாதுர் நிஜபுஷ்கரேண ஜலம் ஸமாதாய குசௌ
ஸ்வமாது:

ப்ரக்ஷாலயாமாஸ ஷடாஸ்யபீதௌ ஸ்வார்த்தம் முதேஸௌ
- கலபானனோஸ்து (13)

ஸிஞ்சாம நாகம் சிசுபாவமாப்தம் கேனாபி ஸத்காரணதோ
- தரித்ரயாம்.

வக்தாரமாத்யம் நியமாதிகானாம் லோகைகவந்த்யம் ப்ரண
மாமி விக்நம் (14)

ஆலிங்கிதம் சாருருசா ம்ருகாக்ஷ்யா ஸம்போகலோலம்
-மதவிஹ்வலாங்கம்

விக்னௌக வித்வம்ஸன ஸக்தமேகம் நமாமி காந்தம்
த்விரதானனம் தம் (15)

ஹேரம்ப உத்யத்ரவிகோடி காந்த: பஞ்சானநே நாபி
விசும்பிதாஸ்ய:

முனீன் சுரான் பக்த ஜனாம்ஸ்ச ஸர்வான்ஸ பாது ரத்யாசு
ஸதா கஜாஸ்ய : (16)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

த்வைபாயனோக்தானி ஸ நிஸ்சயேன ஸ்வதந்தகோடயா
-நிகிலம் லிகித்வா

தந்தம் புராணம் சுபமிந்து மௌளிஸ்தபோபிருக்ரம் மனஸா
ஸ்மராமி (17)

க்ரீடாதடாந்தே ஜலதாவிபாஸ்யே வேலாஜலே லம்பபதி: ப்ரபீத:
பிசிந்த்ய கஸ்யேதி சுராஸ்ததா தம் விச்வேச்வரம்
வாக்பிராபிஷ்டு வந்தி (18)

வாசாம் நிமித்தம் ஸ நிமித்த மாத்யம் பதம் த்ரிலோக்யாமத
-தத்ஸ்துதீனாம்
ஸர்ஸ்வசை வந்த்யம் ந ச தஸ்ய வந்த்ய: ஸ்தாணோ: பரம்
- ரூபமஸௌ ஸ பாயாத் (19)

இமாம் ஸ்துதிம் ய: படதீஹ பக்த்யா ஸமாஹித ப்ரீதிரதீவ சுத்த:
சம்ஸேவ்யதே சேந்திரயா நிதாந்தம் தாரித்ரியஸங்கம் ஸ
- விதாரயேன்ன : (20)

- இதி ஸ்ரீ ருத்ர யாமள தந்த்ரே ஹரகௌரீஸம்வாதே
உச்சிஷ்ட கணேச ஸ்தோத்ரம் ஸமாப்தம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உச்சிஷ்ட கணபதி கவசம்

தேவ்யுவாச -
“தேவ தேவ ஜகன்னாத ஸ்ருஷ்டி ஸ்திதி லயாத்மக
வினா த்யானம் வினா மந்த்ரம் வினா ஹோமம் வினா ஜபம் (1)

ஏன ஸ்மரணமாத்ரேண லப்யதே சாசு சிந்திதம்
ததேவ ச்ரோதுமிச்சாமி கதயஸ்வ ஜகத்ப்ரபோ (2)

ஈச்வர உவாச -
ச்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி குஹ்யாத்குஹ்யதரம் மஹத்
உச்சிஷ்ட கணநாதஸ்ய கவசம் ஸர்வஸித்திதம் (3)

அல்பாயாஸைர் வினா கஷ்டைர் ஜப மாத்ரேண ஸித்திதம்.
ஏகாந்தே நிர்ஜனே அரண்யே கஹ்வரே ச ரணாங்கணே (4)

ஸிந்துதீரே ச கங்காயா: கூலே வ்ருக்ஷதலே ஜலே
ஸர்வ தேவாலயே தீர்த்தே லப்த்வா ஸம்யக் ஜபம் சரேத். (5)

ஸ்நான சௌசாதிகம் நாஸ்தி நாஸ்தி நிர்பந்தனம் ப்ரியே
தாரித்ரியாந்தகரம் சீக்ரம் ஸர்வதத்வம் ஜனப்ரியே (6)

ஸஹஸ்ரசபதம் க்ருத்வா யதி ஸ்நேஹோ அஸ்தி மாம் ப்ரதி
நிந்தகாய குசிஷ்யாய கலாய குடிலாய ச (7)

துஷ்டாய பரசிஷ்யாய காதகாய சடாய
வஞ்சகாய வரக்னாய ப்ராம்ஹணீகமனாய ச (8)

அசக்தாய ச க்ரூராய குருத்ரோஹ ரதாய ச
ந தாதவ்யம் ந தாதவ்யம் ந தாதவ்யம் கதாசன (9)

குருபக்தாய தாதவ்யம் ஸச்சிஷ்யாய விசேஷத:
தேஷாம் ஸித்யந்தி சீக்ரேண ஹ்யன்யதா நச ஸித்யதி (10)

குரு ஸந்துஷ்டி மாத்ரேண கலௌ ப்ரத்யக்ஷ ஸித்திதம்.
தேஹோச்சிஷ்டை: ப்ரஜப்தவ்யம் ததோச்சிஷ்டைர் மஹாமனு : (11)

ஆகாசே ச பலம் ப்ராப்தம் நான்யதா வசனம் மம.
ஏஷா ராஜவதீ வித்யா வினா புண்யம் ந லப்யதே (12)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அத வக்ஷ்யாமி தேவேசி கவசம் மந்த்ர பூர்வகம்
ஏன விஞ்ஞாத மாத்ரேண ராஜபோக பலப்ரதம் (13)

ரிஷிர்மே கணக: பாது சிரஸி ச நிரந்தரம்
த்ராஹி மாம் தேவி காயத்ரீ சந்த ரிஷி: ஸதா முகே. (14)

ஹ்ருதயே பாது மாம் நித்யமுச்சிஷ்ட கணதேவதா
குஹ்யே ரக்ஷது தத்பீஜம் ஸ்வாஹா சக்திஸ்ச பாதயோ: (15)

காமகீலகஸர்வாங்கே விநியோகஸ்ச ஸர்வதா
பார்ஸ்வத்வயே ஸதா பாது ஸ்வசக்திம் கணநாயக: (16)

சிகாயாம் பாது தத்பீஜம் ப்ருமத்யே தாரபீஜகம்
ஹஸ்திவக்த்ரஸ்ச சிரஸி லம்போதரோ லலாடகே (17)

உச்சிஷ்டோ நேத்ரயோ: பாது கர்ணௌ பாது மஹாத்மனே
பாசாங்குச மஹாபீஜம் நாசிகாயாம் ச ரக்ஷது (18)

பூதீச்வர: பர: பாது ஆஸ்யம் ஜிஹ்வாம் ஸ்வயம்வபு:
தத் பீஜம் பாது மாம் நித்யம் க்ரீவாயாம் கண்டதேசகே (19)

கம்பீஜம் ச ததா ரக்ஷேத் ததா த்வக்ரே ச ப்ருஷ்டகே
ஸர்வ காமஸ்ச ஹ்ருத் பாது பாது மாம் ச கரத்வயே (20)

உச்சிஷ்டாய ச ஹ்ருதயே வஹ்நிபீஜம் ததோதரே
மாயாபீஜம் ததா கட்யாம் த்வா ஊரு ஸித்தி தாயக: (21)

ஜங்காயம் கணநாதஸ்ச பாதௌ பாது விநாயக:
சிரஸ: பாதபர்யந்த உச்சிஷ்ட கணநாயக: (22)

ஆபாதமஸ்தகாந்தம் ச உமாபுத்ரஸ் ச பாது மாம்
திசோ அஷ்டௌ ச ததா ஆகாசே பாதாலே விதிஸாஷ்டகே (23)

அஹர்நிசம் ச மாம் பாது மதசஞ்சலலோசன:
ஜலே அநலே ச சங்க்ராமே துஷ்ட காராக்ருஹே வனே (24)

ராஜத்வாரே கோரபதே பாதுமாம் கணநாயக:
இதம் து கவசம் குஹ்யம் மம வக்த்ராத்விநிர்கதம் (25)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

த்ரைலோக்யே ஸததம் பாது த்விபுஜஸ்ச சதுர்புஜ:
பாஹ்யமாப்யந்தரம் பாது ஸித்தி புத்திர் விநாயக: (26)

ஸர்வஸித்திப்ரதம் தேவி கவச ம்ருத்திஸித்திம்
ஏகாந்தே ப்ரஜபேன் மந்த்ரம் கவசம் யுக்தி ஸம்யுதம் (27)

இதம் ரஹஸ்யம் கவசமுச்சிஷ்ட கணநாயகம்
ஸர்வவர்மஸு தேவேசி இதம் கவசநாயகம் (28)

ஏதத் கவச மாஹாத்மியம் வர்ணிதும் நைவ சக்யதே
தர்மார்த்த காம மோக்ஷம் ச நானா பலப்ரதம் ந்ருணாம் (29)

சிவபுத்ர: ஸதா பாது பாது மாம் ச ஸுரார்சித:
கஜானன: ஸதா பாது கண ராஜஸ்ச பாது மாம் (30)

ஸதா சக்தி ரத: பாது பாது மாம் காம விஹ்வல:
ஸர்வாபரண பூஷாடய: பாது மாம் ஸிந்தூரார்சித: (31)

பஞ்சமோத கர: பாது பாது மாம் பார்வதீ ஸுத:
பாசாங்குச தர: பாது பாது மாம் ச தநேச்வர: (32)

கதாதர: ஸதா பாது பாது மாம் காமமோஹித:
நக்னநாரீரத: பாது பாது மாம் ச கணேச்வர: (33)

அக்ஷயம் வரத: பாது சக்தி யுக்த: ஸதாவது
பாலசந்த்ர: ஸதாபாது நானாரத்ன விபூஷித: (34)

உத்திஷ்ட கணநாதஸ்ச மத கூர்ணிதலோசன:
நாரீயோநி ரஸாஸ்வாத: பாது மாம் கஜகர்ணக: (35)

ப்ரஸன்னவதன: பாது பாது மாம் பகவல்லப:
ஜடாதர: ஸதா பாது பாது மாம் ச கிரீடிக: (36)

பத்மாஸனஸ்தித: பாது ரக்தவர்ணஸ்ச பாதுமாம்
நக்நஸாம மதோன்மத்த: பாது மாம் கணதைவத: (37)

வாமாங்கே சுந்தரீயுக்த: பாது மாம் மன்மதப்ரபு:
க்ஷேத்ரப: பிசிதம் பாது பாது மாம் ச்ருதிபாடக: (38)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூஷணாட்யஸ்து மாம் பாது நாநாபோகஸமன்வித:
ஸ்மிதானன: ஸதா பாது ஸ்ரீ கணேச குலான்வித: (39)

ஸ்ரீ ரக்தசந்தன மய: சுலக்ஷண கணேச்வர:
ச்வேதார்க்க கணநாதஸ்ச ஹரித்ரா கண நாயக: (40)

பாரபத்ர கணேசஸ்ச பாது ஸப்த கணேச்வர:
ப்ரவாளக கணாத்யக்ஷோ கஜதந்தோ கணேச்வர: (41)

ஹரபீஜ கணேசஸ்ச பத்ராக்ஷ கணநாயக:
திவ்யௌஷதி ஸமுத்பூதோ கணேசார்ச்சிதப்ரத: (42)

லவணஸ்ய கணாத்யக்ஷோ ம்ருத்திகா கணநாயக:
தண்டுலாக்ஷ கணாத்யக்ஷோ கோமயஸ்ச கணேச்வர: (43)

ஸ்படிகாக்ஷ கணாத்யக்ஷோ ருத்ராக்ஷ கணதைவத:
நவரத்ன கணேசஸ்ச ஆதிதேவோ கணேச்வர: (44)

பஞ்சானனஸ்சதுர்வக்த்ர: ஷடானன கணேச்வர:
மயூரவாஹன: பாது பாது மாம் மூஷகாஸன: (45)

பாது மாம் தேவதேவேச: பாது மாம்ரிஷிபூஜித:
பாது மாம் ஸர்வதா தேவோ தேவதானவ பூஜித: (46)

த்ரைலோக்ய பூஜிதோ தேவ: பாது மாம் ச விபு: ப்ரபு:
ரங்கஸ்தம் ச ஸதா பாது ஸாகரஸ்தம் ஸதாவது (47)

பூமிஸ்தம் ச ஸதா பாது பாதாலஸ்தம் ச பாது மாம்
அந்தரிக்ஷ ஸதா பாது ஆகாசஸ்தம் ஸதாவது (48)

சதுஷ்பதே ஸதா பாது த்ரிபதஸ்தஞ்ச பாது மாம்
வில்வஸ்தஞ்ச வனஸ்தஞ்ச பாது மாம் ஸர்வதஸ்தனும் (49)

ராஜத்வாரஸ்திதம் பாது பாது மாம் சீக்ரஸித்தித:
பவானீபூஜித: பாது ப்ரம்ஹவிஷ்ணு சிவார்ச்சித: (50)

இதம் து கவசம் தேவி படனாத் ஸர்வ ஸித்திதம்
உச்சிஷ்ட கணநாதஸ்ய ஸமந்த்ரம் கவசம் பரம் (51)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்மரணாத் பூபுஜத்வம் ச லபதே ஸாங்கதாம் த்ருவம்
வாச: ஸித்திகரம் சீக்ரம் பரஸைன்ய விதாரணம் (52)

ப்ராதர் மத்யாஹ்ந ஸாயாஹ்நே திவா ராத்ரௌ படேன்நர:
சதுர்த்யாம் திவஸே ராத்ரௌ பூஜனே மானதாயகம் (53)

ஸர்வஸௌபாக்யதம் சீக்ரம் தாரித்ரியார்ண வகாதகம்
சுதார சுப்ரஜா ஸௌக்யம் ஸர்வஸித்தி கரம் ந்ருணாம் (54)

ஜலே அதவா அனலே அரண்யே ஸிந்துதீரே ஸரித்தடே
ஸ்மசானே தூரதேசே ச ரணே பர்வதகஹ்வரே (55)

ராஜத்வாரே பயே கோரே நிர்பயோ ஜாயதே த்ருவம்
ஸாகரே ச மஹாசீதே துர்பிக்ஷே துஷ்ட சங்கடே (56)

பூத ப்ரேத பிசாசாதி யக்ஷராக்ஷஸஜம் பயே
ராக்ஷஸீ யக்ஷிணீ க்ரூரா ஸாகினீ டாகினீ கணா: (57)

ராஜம்ருத்யு ஹரம் தேவி கவசம் காமதேனுவத்
அநந்த பலதம் தேவி ஸதி மோக்ஷம் ச பார்வதி (58)

கவசேன விநா மந்த்ரம் யோ ஜபேத் கணநாயகம்
இஹ ஜன்மனி பாபிஷ்டோ ஜன்மாந்தே மூஷகோ பவேத் (59)

இதி பரமரஹஸ்யம் தேவதேவார்ச்சனம் ச கவச பரமதிவ்யம்
- பார்வதீ புத்ரரூபம்

படதி பரம போகைச்வர்ய மோக்ஷப்ரதம் ச லபதி ஸகல
- ஸௌக்யம் சக்திபுத்ர ப்ரஸாதாத் (60)

இதி ஸ்ரீ ருத்ர யாமளதந்த்ரே உமாமஹேச்வர
ஸம்வாதே உச்சிஷ்ட கணேச கவசம் ஸமாப்தம்:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குருநாதர் பாதம் பணிகிறோம்

VALCOS PAPERS

WHOLESALE
DEALER IN
PAPER
BOARDS
ETC.

19/2, Stringers Street
Chennai - 600 108.
Phone : 25388542 / 25386381

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குருநாதர் பாதம் பணிகிறோம்

SHREE GANESHA GRAPHICS
(PRINTERS)

103, I MAIN ROAD
SENTHIL NAGAR ANNEXE
CHINNA PORUR
PORUR, CHENNAI - 600 116
PHONE : 24767531

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஜெய துர்கா பீடம்
ஆஸ்ரமம் சாலை, படப்பை - 601 301
(தாம்பரம் - காஞ்சீபுரம் நெடுஞ்சாலை)
தொலைபேசி 95411-27450

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.